


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்வளர்ச்சி துறையின் சார்பில், அனைத்து அரசுத் துறை வாரியங்கள், கழகங்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் நாகர்கோவில், சேது இலட்சுமிபாய் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கல்லுவீட்டில் கலையரங்கத்தில் இன்று (30.12.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 922/2016 நாள்: 30.12.2016

**கன்னியாகுமரி மாவட்டஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் மற்றும் தமிழ்வளர்ச்சி இயக்குநர் (பொ) முனைவர் கோ.விசயராகவன் அவர்களின் முன்னிலையில்,
தமிழ்வளர்ச்சி துறையின் சார்பில் நடைபெற்ற ஆட்சிமொழிப் பயிலரங்கம், நிறைவுநாளில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு காசோலைகள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை
இன்று (30.12.2016) வழங்கினார்.**

தமிழ்வளர்ச்சி துறையின் சார்பில், அனைத்து அரசுத் துறை வாரியங்கள், கழகங்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் 29.12.2016 மற்றும் 30.12.2016 ஆகிய இரண்டு நாட்கள் நாகர்கோவில், சேது இலட்சுமிபாய் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கல்லுவீட்டில் கலையரங்கத்தில் நடைபெற்றது.

இறுதி நாளான இன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் மற்றும் தமிழ்வளர்ச்சி இயக்குநர் (பொ) முனைவர் கோ. விசயராகவன் அவர்களின் முன்னிலையில், ஆட்சிமொழிப் பயிலரங்கம், நிறைவுநாளில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே நடைபெற்ற பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்யில் வெற்றிபெற்ற 18 மாணவ, மாணவியர்களுக்கு முதல்பரிசாக ரூ.10 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ. 7 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.5 ஆயிரமும்-க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களும், வழங்கி, தெரிவித்ததாவது:-

தமிழக அரசு, தமிழ்வளர்ச்சி துறையின் மூலம், அனைத்து அரசு அலுவலர்களும் திறம்பட செயலாற்ற பல்வேறு கட்டங்களில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக ஆட்சிமொழி வரலாறுச் சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்க அரசாணைகள், மொழிபெயர்ப்பு கலைச்சொல்லாக்கம், அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல், மொழிப்பயிற்சி, ஆட்சிமொழி ஆய்வும் குறைகளைவு நடவடிக்கைகளும் ஆகிய ஆறு தலைப்புகளில் தமிழ் வளர்ச்சித் துறையின் துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது. குறிப்பாக தமிழக அரசு கடந்த ஆண்டிலிருந்து 1-ம் வகுப்பு முதல் தமிழ் கட்டாய பாடமாக்கியுள்ளது. எனவே பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து அரசு அலுவலர்களும், கோப்புகளை தமிழ்மொழியில் கையாளவேண்டும் எனவும், தமிழில் கையொப்பம் போடவேண்டும். அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழிச் செயலாக்கத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும், மற்றவர்களிடம் எடுத்துக்கூறி, விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்வதோடு, தங்களது குழந்தைகள் மற்றும் தமிழ்வளர்ச்சி பேராசிரியர்களுக்கு எப்பொழுதுமே நாம் உறுதுணையாக இருந்து, தமிழ் வளர்ச்சியடைய முக்கிய பங்கு அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து ஆட்சிமொழித் திட்ட செயலாக்கத்தில் 2013-ம் ஆண்டில் உள்ளாட்சி நிதித்தணிக்கை அலுவலகத்திற்கும், 2014-ம் ஆண்டில் உதவி ஆணையர் (ஆயம்), அலுவலகத்திற்கு கேடயம் மற்றும் சான்றிதழ்களும், சிறந்த வரைவுகள் குறிப்புகள் எழுதி முதல் பரிசு பெற்ற வருவாய் உதவியாளர் திருமதி. சி.தேவகி அவர்களுக்கு ரூ.3 ஆயிரத்திற்கான காசோலைகளும், இரண்டாம் பரிசு பெற்ற உதவி இயக்குநர், ஊராட்சி அலுவலகம், பதிவுரு உதவியாளர் திருமதி.வ.ராஜேஸ்வரி அவர்களுக்கு ரூ. 2 ஆயிரத்திற்கான காசோலைகளும், பாராட்டுச்சான்றிதழ்களும் இன்று வழங்கினார்.

நிகழ்ச்சியில் மண்டல தமிழ்வளர்ச்சி துணை இயக்குநர் (திருநெல்வேலி) முனைவர் க. பசும்பொன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) திரு. ச.நடராஜன், குமரி மாவட்ட வரலாறு பண்பாடு ஆய்வு மையம் திரு. சிவ. பத்மநாபன், குறளகம் தலைவர் திரு. தமிழ்க்குழவி ஆ.விசுவநாதன், மொழியியல் மற்றும் தகவல் தொடர்பியல் புலம் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் மேனாள் தலைவர் பேராசிரியர் வீ. ரேணுகாதேவி, ஏ.பி.சி. மகாலெட்சுமி மகளிர் கல்லூரி (தூத்துக்குடி) இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை முனைவர் ச.மல்லிகா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.